community
The New Apostolic Church around the world

02/2016/ Tamil



## கிறிஸ்துவினாலே வெற்றியடைதல்

# தேவபயமும் தேவன்மேல் நம்பிக்கையும்

பிரேசில் நாட்டில் தேவாராதனை

நமது விசுவாசத்தை சாட்சியிடுதல்

தேவசடங்குகள்

மரணத்தின்பின் வாழ்வு

New Apostolic Church
International

# தேவபயமும் அவர்மேல் நம்பிக்கையும்



NAC International

அன்பின் சகோதர சகோதரிகளே,

“கிறிஸ்துவினாலே வெற்றி” என்பது 2016ம் ஆண்டில் நமது குறிக்கோள். நமது தினசரி வாழ்விலும் இது நமக்கு பொருந்துகிறது. இப்படிப்பட்ட இலட்சியம் பல கோணங்களை உடையது. இதில் முக்கியமான ஒன்றை இங்கு நான் சுட்டிக்காட்டுவதற்கு விரும்பு கிறேன். கிறிஸ்துவினால் நாம் வெற்றியடைவதற்கு நமக்கு தேவபயமும் அவர்மேல் நம்பிக்கையாயிருத்த லும் அவசியமாகிறது. தேவபயம் என்பதில் தேவனி டம் பக்திமரியாதை கொண்டிருத்தல் என்ற அர்த்தம் உள்ளது. அவரே நமது சிருஷ்டிகரும் பரலோகபிதாவு மானவர். நமது வாழ்நாட்கள் உள்ளவரைக்கும் நாம் அவரை நம்பியிருப்போம்.

இதற்கு வேதாகமத்திலிருந்து சில உதாரணங்கள்:

- பாவத்தை வெற்றிகொள்வதற்கு யோசேப்பின் தேவபயம் உதவிசெய்தது. அவன் தேவபயம் நிரம்பிவனாயிருந்தான். ஆதலால், தேவன் அவனைக் காண்பதையும், அவனோடிருப்பதையும் அவன் அறிந்துகொண்டான். போத்திபாரின் மனைவி அவனை தீயசெயலுக்குத் தூண்டியபொழுது அதை அவன் புறக்கணித்தான். எல்லோராலும் மறக்கப்பட்டவனாக அவன் சிறையில் இருந்த காலத்திலும், தேவனுக்கு உண்மையுள்ளவனாக நிலைத்தான். முடிவில் தேவன் தலையிட்டு அவனை விடுதலைபண்ணினார். தேவன் காண்கிறார், ஒவ்வொன்றையும் அறிகிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆதலால் பாவத்தை விட்டுவிலகி அவரை நம்புவோம். அவர் நம்மை மறக்கமாட்டார்.

- தேவனுடைய எல்லாக் கிரியைகளையும் மோசே திடமாய் நம்பினான். பார்வோனிடம் அவன் செய்த போராட்டம் ஆரம்பத்தில் பயனற்றதாய் தோன்றியது. ஜனங்களை புறப்பட அனுமதிக்கும்படி ஒன்பது தடவை அவன் பார்வோனிடம் கேட்டான். அனைத்தும் மறுக்கப்பட்டது. ஆனால், மோசே இடைவிடாமல் தேவனை நம்பினான். முடிவில் ஜனங்கள் புறப்படுவதற்கு அனுமதியைப் பெற்றான். யாவரும் கீழ்ப்படிந்தனர். தேவன் அவர்களை விடுதலைபண்ணினார். இன்றும் எத்தனை தடவைகள் தேவவல்லமையை நாம் அனுபவிக்கிறோம். பிசாசின் எல்லா தாக்குதல்களின் நடுவிலும் தேவனை நம்புவோம். பிசாசிடமிருந்து பூரணமாய் தப்புவோம்.

- ஒரு பூரண மாற்றத்தை பவுல் அடையவேண்டியவரானார். அவருக்குப் பிரதானமாயிருந்த யாவும் திடீரென அவசியமற்றதாயிற்று. ஆனால், அவர் விசுவாசித்து தேவன்மேல் நம்பிக்கை வைத்தார். தேவகரத்தில் கருவியாய் தொடர்ந்து செயற்பட்டார். கர்த்தரின் சபையை இரட்சிப்பை நோக்கி நடத்தினார். அப்போஸ்தலராய் உலகெங்கும் சென்று சுவிசேஷம் அறிவிக்கும்படி தேவகுமாரன்தாமே அவருக்குக் கட்டளை அளித்தார். இன்றும் தேவன் நம்மை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், பரத்துக்கு எழுந்தருளுதல், அவரது மறுவருகை என்னும் நற்செய்தியை உலகுக்கு அறிவிக்கும்படி அனுப்புகிறார். கிறிஸ்து வருகிறார், இதையே அவர் வாக்குத்தத்தம்பண்ணினார்.

ஆழ்ந்த பக்தி மரியாதையுடன் எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வோம். அவரை நாம் நம்பமுடியும். கிறிஸ்துவினாலே வெற்றியை இது கொண்டுவரும்!

உலகின் எல்லா அப்போஸ்தலர்களுடனும் இணைந்து என் மனமார்ந்த வாழ்த்துகளை உங்களுக்கு அறிவிக்கிறேன்.




ஜோன்-லூக் ஷ்னைடர்

# சவால்களுக்கு மத்தியிலும் நமது விசுவாசத்தை பகிரங்கப்படுத்துகிறோம்



NAC Brasilia



ரியோ டி ஜெனிரோ நகரத்தின் மேற்கில் உள்ள கொர்கொவாடோ மலையின் 710 மீட்டர்கள் உயர கிரானைட் சிகரத்தில் நின்று நகரின் அற்புதமான எழிலைக் கண்டு ரசிக்கமுடியும். இந்த மலை இரட்சகர் இயேசுவின் பிரமாண்டமான சிலையினால் பிரசித்தமடைகிறது. பிரேசில் தலைநகர் ரியோவில் தலைமை அப்போஸ்தலர் ஷ்னைடர் 2015 ஒக்டோபர் 28ம் திகதி தேவாராதனை நடத்தினார்.

1 கொரிந்தியர் 16: 9

"ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது:

அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, நம் வேதவாக்கியம் அப்போஸ்தலன் பவுலினால் கொரிந்தியருக்குக் கூறப்பட்டது. எபேசு பட்டணத்தில் புரிவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் வேலையைக் குறித்து அவர் கூறுகிறார். ஒரு பயணத்தின்பொழுது எபேசு பட்டணத்தில் தங்கிய அவர், அங்கு ஒரு சபைக்கூட்டத்தை நிறுவினார். அதன்பின் கொரிந்தியருக்கு எழுதினார்: " எபேசு பட்டணத்தில் இருப்பேன்.ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது: விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்." கடந்த சில நாட்களாக இதைக் குறித்து நான் சிந்தித்தேன். அந்த சபைக்கூட்டம் நிறுவப்பட்ட வரலாறு அப். 19,20 அதிகாரங்களில் கூறப்படுகிறது. அதை நான் வாசித்தபொழுது பிரேசில் நாட்டில் வாழும் உங்களைப் பற்றி நான் சிந்தித்தேன். ஏனெனில் அந்த சூழ்நிலை உங்கள் சூழ்நலைக்கு ஒப்பானது. எனவே, இந்த வேதவசனம் இன்று உங்களுக்கு உகந்தது.

பவுல் எபேசு பட்டணத்திற்கு வந்தபோது, ஒரு சபைக்கூட்டத்தை உருவாக்குவதற்கு அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார். தனது விசுவாசத்தைப் பகிரங்கமாக்கி நகரத்தில் வசித்தவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார். அக்காலத்தில் மிகப்பெரிய பட்டணமாய் விளங்கிய எபேசு பட்டணத்தில் வசித்த இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்குள் பன்னிரண்டு மனிதர்கள் மட்டுமே சாட்சியை ஏற்றுக்கொண்டனர். (அப். 19:7). இருப்பினும் அதை ஒரு மேன்மையான சந்தர்ப்பமாய் அப்போஸ்தலன் பவுல் கண்டார். தைரியமிழக்கவில்லை. "தேவன் என்னை இங்கு அனுப்பினார், நான் செயற்பட வேண்டும்" என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார். விரோதஞ்செய்கிறவர்கள் மத்தியிலும் அவர் அதைச் செய்தார்.

## தேவஊழியத்தில் செயற்படும் சந்தர்ப்பம் இன்னமும் யாவருக்கும் உண்டு

முதலில் யூதர்களிடம் சென்றார். மிகவும் பக்திமான்களாகிய யூதர்களின் ஒரு கூட்டம் அங்கிருந்தது. இயேசுவைப் பற்றியும் அப்போஸ்தலராய் தனக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை குறித்தும் அவர்களிடம் எடுத்துரைத்தார். " சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகி..." என்று வாசிக்கிறோம் (அப். 19:9). அவர்கள் தங்கள் பாரம்பரியத்தில் ஊறியிருந்தார்கள். இயேசுகிறிஸ்து தேவகுமாரன் என்னும் நற்செய்தியையும், பவுல் கிறிஸ்துவின் அப்போஸ்தலன் என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பிரேசில் நாட்டின் ஜனத்தொகையுடன் ஒப்பிடுகையில் தேவபிள்ளைகளின் எண்ணிக்கை சிறியதே. உங்கள் விசுவாசத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு நீங்கள் பிரயத்தனப்படுகிறீர்கள். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள அநேக கிறிஸ்தவர்கள் இங்கு ஆயத்தமாயில்லை. அவர்கள் தங்கள் பாரம்பரிய விசுவாசத்தில் வேரூன்றியிருக்கிறார்கள். ஜீவனுள்ள அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள், இயேசு மறுபடியும் வருகிறார், மறுமையிலும் ஆத்துமாக்களுக்கு இயேசு இரட்சிப்பு வழங்குகிறார் என்று நீங்கள் கூறும்பொழுது, அது தங்களுக்கு முற்றிலும் அந்நியமானது , அதை விசுவாசிக்க முடியாது என்கிறார்கள். இதில் நாம் எவரையும் நிர்ப்பந்திக்க முடியாது. அவர்கள் தங்கள் விசுவாசத்தில் வேரூன்றியவர்களாய் இருக்கிறார்கள். ஒருசிலரே புதிய செய்தியை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்கள் என்பது பவுலுக்கு ஒரு பிரச்சினையாகவே காணப்பட்டது.

இரண்டாவதாக, தங்கள் விசுவாசத்திலே அவர்கள் நிலைத்திருக்க விரும்பினர். மேலும் ஒரு கூட்டத்தினர் அங்கிருந்தார்கள். பல்வேறு ஊர்களில் சுற்றித்திரிந்த அவர்கள் மனிதரைப் பிடித்திருந்த பொல்லாத ஆவிகளைத் துரத்துவதற்கு முயன்றார்கள், அதை இயேசுவின் நாமத்தில் புரிவதாய் கூறினார்கள் ((அப். 19:13). இயேசுவின் நாமத்தை அவர்கள் துர்ப் பிரயோகம் செய்தது பவுலுக்கு பெரும் பிரச்சினையாயிருந்தது.

மனிதரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக கூறி இன்றும் இயேசுவின் நாமத்தைப் பலர் துஷ்பிரயோகம் செய்வதை நாம் அறிந்திருக்கிறோம். தங்கள் சபைகளுக்கு வந்தால் செல்வந்தராகமுடியும், பிரச்சினைகள் தீரும், பூமிவாழ்க்கை ஆசீர்வதிக்கபடும் என்று கூறுகிறார்கள். அதுவே நம் பிரச்சினை. ஏனெனில், சுவிசேஷம் அதைக் கூறவில்லை! இக்காரணத்தினால் இயேசு பூமிக்கு வரவில்லை. "நீங்கள் அதிசயங்கள் நிகழ்த்துவீர்களா?" என்றும் பலர் நம்மிடம் கேட்கிறார்கள். நாமோ, கிறிஸ்துவின் மறுவருகைக்காக மனிதரை ஆயத்தப்படுத்துகிறோம் என்கிறோம். எனவே நமது செய்தியை பகிரங்கப்படுத்தல் சிரமமாயிருக்கிறது.

மூன்றாவதாக ஒரு பிரச்சினையும் எபேசுவில் பவுலுக்கு இருந்தது. ஒருவன் தியானா தேவதையின் விக்கிரகங்களைச் செய்து ஜனங்களிடம் விற்று பெரும் பணம் சம்பாதித்தான். பவுலின் பிரசங்கத்தைக் கேட்கமுடியாது, தன் வியாபாரத்துக்கு பாதகத்தை உண்டுபண்ணுகிறான் என்று முறையிட்டான். இவ்வாறு பவுலை பட்டணத்திலிருந்து அப்புறப்படுத்த முயன்றார்கள்.

எப்பொழுதும் பணத்தை உண்டுபண்ண நாடும் ஆவிகளையும் நாம் அறிந்திருக்கிறோம். "நாங்கள் பணம் சம்பாதிக்க வேண்டும், அதற்காக உழைக்கவேண்டும், தேவனுக்காக எங்களுக்கு நேரம் கிடையாது" என்று கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். தங்கள் வியாபாரத்துக்கு சுவிசேஷம் தடையாயிருப்பதாய் சிலர் கருதுகிறார்கள். ஏனெனில், "கிறிஸ்துவின்

சுவிசேஷத்தின்படி வாழ்வதும் வியாபாரம்பண்ணுதலும் சாத்தியமற்றது. நேர்மையாய் நடக்குபடி என்னிடம் கூறவேண்டாம், நான் பணம் சம்பாதிக்கவேண்டும்!" என்று கூறுகிறார்கள். இவ்வாறு, அவர்களின் வணிக நடவடிக்கைகளில் சுவிசேஷம் தடையாயிருக்கிறது என்று கருதுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைக்கும் பவுல் முகங் கொடுக்கவேண்டியவரானார்.

"இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் என்னால் என்னசெய்யமுடியும்? இது மிகவும் சிரமமானது. அதிக மானோர் தங்கள் பாரம்பரியத்தை ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். புதிய செய்தியை ஏற்க விரும்பவில்லை. மற்றவர்கள் தங்கள் உலக நலன்களுக்காக இயேசுவில் நாட்டங்கொள்கிறார்கள். மேலும் பலர் பணம் சம்பாதிப்பதில் கருத்தாயிருக்கிறார்கள்." என்று பவுல் கூறியிருக்கமுடியும். ஆனால், இவற்றை அறிந்துகொண்டும் கூறினார்: " ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது." அவை யாவும் தன் ஊழியத்திற்கு நேர்மறையான சந்தர்ப்பங்களாய் பவுல் கருதினார்.

சகோதர சகோதரிகளே, அது இன்றும் இங்கு நமக்கும் பொருந்துகிறது. தேவஊழியத்தில் செயற்படுவதற்கு நமக்கும் அற்புதமான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது. உலகில் யாவருக்கும் இது பொருந்துகிறது. இயேசுகிறிஸ்து இன்னமும் வரவில்லை, ஏனெனில், செய்வதற்கு இன்னமும் அநேக வேலைகள் உண்டு.

பூமியில் அவர் அப்போஸ்தலர்களை அனுப்பினார். அவர்க







ளுக்கு ஒரு கடமையை வழங்கினார். இந்த ஊழியம் பூர்த்தியடைந்தவுடன் அவர் மறுபடியும் வருவார். இயேசு வரும் வரைக்கும் இன்னமும் வேலைகள் நமக்கு உண்டு. பூமியில் அப்போஸ்தலர்கள் இன்னமும் செயற்படுகிறார்கள் எனும் உண்மை, சுவிசேஷத்தைப் பகிரங்கப்படுத்தல் இன்னமும் சாத்தியம் என்பதற்கு அடையாளமாகும். மனிதர்கள் தேவ பிள்ளைகளாய் இன்னமும் மாறமுடியும், அது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. பூமியிலே அப்போஸ்தலர்கள் செயற்படும் வரைக்கும் இது இன்றும் சாத்தியம் என்று நான் விசுவாசிக்கிறேன். பவுல் எவ்வாறு தன் கிரியைகளை நிறைவேற்றமுடிந்தவரானார் என்பதை இங்கு சிந்திப்போம். கர்த்தரைக் குறித்துப் பேசுவதையும், விசுவாசத்தைப் பகிரங்கப்படுத்துவதையும் அவர் நிறுத்தவில்லை. இதையே நாமும் செய்யவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நமது விசுவாசத்தைப் பகிரங்கப்படுத்துவோம். நமது அன்றாட வாழ்வில் இயல்பாக மனிதர்களிடம் நம் விசுவாசத்தைக் குறித்துக் கூறமுடியும். "தேவன் எனக்கு உதவினார். எனக்கிருந்த பிரச்சினைகளை நீக்கினார். தேவாராதனைக்கு நான் சென்றேன். அங்கு எனக்கு ஆறுதலும் பெலனும் கிடைத்தது" என்று நாம் விசுவாசத்தைப் பகிரங்கப்படுத்த முடியும். கடந்த வாரம் நாம் துக்கப்பட்டோம், இன்று மகிழ்ச்சியாயிருக்கிறோம் என்பதால் எவரும் நம்மைப் பார்த்து நகைக்கமாட்டார்கள். இவ்விதம் ஒரு விதையை நாம் விதைக்கிறோம்.

## தேவனாலே எதுவும் சாத்தியமற்றதில்லை என்று நிரூபிப்போம்.

மேலும் ஒன்றைப் பவுல் செய்தார். பவுல் மூலமாக அதிசயங்களை தேவன் நடப்பித்தார். மனிதர்கள் ஆச்சரியமடைந்தார்கள். நான் உட்பட நம்மில் எவரும் குணப்படுத்தும் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், அப்படிப்பட்ட அதிசயங்களை நாம் செய்யவேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. சாத்திமில்லை என்று கருதப்படுகிறவைகளை நிறைவேற்றுதல் அதிசயமாகும். அதை நாம் செய்கிறோம். நம் வாழ்விலே புயல் வீசும் தருணங்களிலும் சமாதானமுள்ளவர்களாக திட நம்பிக்கையுடன் நாம் இருப்பதையும், நம் வாழ்வில் ஒவ்வொன்றும் தவறும்பொழுதும் தேவனுக்கு நன்றியாயிருப்பதையும் அதிசயங்கள் உள்ளடக்குகின்றன. இதை அநேகர் விளங்கிக்கொள்வதில்லை. "துக்கப்படுவதற்கு காரணங்கள்

இருப்பினும்கூட, சமாதான மும் திடநம்பிக்கையும் உள் ளவர்களாய் இருக்கிறார் கள்" என்று மற்றவர்கள் நம்மைக் குறித்து சிந்திக்க முடியும். அநேகருக்கு இது அதிசயமாய் தோன்றுகிறது. விசுவாசம் நிறைந்த எல்லா தேவபிள்ளைகளும் இதை செய்யமுடியும்.

வித்தியாசமான மனிதர்கள் விசுவாசத்திலும் அன்பிலும் ஒன்றாயிருத்தலும் அதிசய மே. சபைக்கூட்டத்தில், வித் தியாசமானவர்கள், ஏழை கள் பணக்காரர்கள், கல்வி மான்கள், படிக்காதவர்கள் என்று வித்தியாசமானவர் கள் இருந்தாலும்கூட, ஒரு மித்து இருப்பதை பலர் அதி சயமாய் காண்கிறார்கள். இதை அவர்களால் விளங் கிக்கொள்ளமுடிவதில்லை. இவ்விதம் நாம் அதிசயங்கள் நிறைவேற்றுகிறோம். நமக் கு இடையூறுசெய்தவர்க ளை நாம் மன்னிக்கிறோம் என்பது அநேகருக்கு புரியா த புதிராய் தோன்றுகிறது. இது சாத்தியமற்றது என்று நம்மை வேடிக்கையாய் மனிதர் பார்க்கிறார்கள். ஒரு சாதாரண மனிதன் இதைச் செய்யமாட்டான் என்று சிந் திக்கிறார்கள். ஆனால் நாம் கூறமுடியும்: "உண்மையில் இது சாத்தியமற்றது. ஆயி னும் தேவனாலே நமக்கு இது சாத்தியமாகிறது!" தேவனாலே எதுவும் சாத்தியமற்றதில்லை என்று நிரூபிப்போம். இதைத் தான் பவுல் செய்தார்.



## சுயநலம் பெருகும் ஒரு உலகில் மகிழ்ச்சியையும் சோகத்தையும் பிறருடன் பகிர்ந்துகொள்கிறோம்.

மேலும் ஒன்றை அவர் புரிந்தார். மூன்று வருடங்கள் எபேசு வில் அவர் இருந்தார். அப்பொழுது ஜனங்களின் மகிழ்ச்சி யிலும் துக்கத்திலும் அவர் பங்கேற்றார். அவர்களோடு அழ வும் செய்தார். விசுவாசத்தையும் சுவிசேஷத்தின் மூலப்பொ ருளையும் அறிகைகைபண்ணுவதற்கு அது அற்புதமான வழி யாயிருந்தது. சுயநலம் பெருகும் ஒரு உலகில் மகிழ்ச்சியையும் சோகத்தையும் பிறருடன் பகிர்ந்துகொள்கிறோம். அவர்க ளின் வேதனைகளை நாம் காண்கையில், அவர்களை ஆறு தல்படுத்த முனைவோம். நித்திய மகிழச்சியையும் சமாதானத் தையும் அவர்கள் பெறுவதற்கு உதவிசெய்வோம்.

மூன்று வருடங்களாய் பவுல் அதைச் செய்தார். ஒரு புதிய தத்துவத்தை பவுல் பிரசங்கிக்கிறார் என்று மட்டுமல்லாமல், அவர் தங்களின் துயரிலும் பங்குகொள்வதை மனிதர் உணர்ந்தார்கள். புதிய அப் போஸ்தல விசுவாசத்தைக் கொண்டிராதவர்களும் மனி தர் தங்கள் வேதனைகளைச் சுமப்பதற்கு நாம் உதவிசெய் வோம். இவ்வாறு உதவுகி றவர்கள் உலகுக்கு அவசி யப்படுகிறார்கள் என்று உண்மையாகவே நான் கரு துகிறேன்.

பவுலின் வல்லமைக்கு இன்னும் ஒரு காரணம் இருந்தது. தன்னுடைய சுய ஆதாயத்துக்காக அவர் எதையும் செய்யவில்லை. எதையும் அவர் பணத்துக் காகவோ சுயமகிமைக்கா கவோ செய்யவுமில்லை. இதையே நம்மைக் குறித்தும் மற்றவர்கள் அறிந்துகொள் ளவேண்டும். நமது சபை யின் அங்கத்தவர் தொகை யைப் பெருக்கவோ அல்லது சபையின் வருமானத்தை அதிகரிக்கவோ நாம் ஆர்வ மாயிருக்கவில்லை என்பத னை சகமனிதர் அறிந்து கொள்ளவேண்டும். நமது அயலாருடன் தேவனுடைய மகிமையைப் பகிர்ந்து கொள்வதையே நாம் விரும்புகிறோம். இதை நாம் நமது அன்பினாலே செய்கிறோம். இதுவே நமது உற்சாகம்.

அநேகரை அழைத்துவந்து, சபையின் அங்கத்தவர்களாய் மாற்றுவோமெனில் நம் ஆத்துமா இரட்சிக்கப்படும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இது சரியான உற்சாகமா? இரண்டு காரணங்களுக்காக இவ்வாறு நான் எண்ணுவதில்லை. ஒன்று, அவர்கள் இரட்சிப்பை சம்பாதிக்கமுடியும் என்று எண்ணுகிறார்கள். ஆயினும் எவராலும் இரட்சிப்பை சம்பாதிக்கமுடியாது. நம்மாலே இலட்சம் பேர் புதிய அப்போஸ்தல சபையில் சேர்ந்தாலும்கூட! இரண்டாவதாக, நமது அயலாரில் நாம் அன்புகூரவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். எனது சொந்த இரட்சிப்பு மட்டுமே எனது இலட்சியமாயிருக்குமெனில், நான் தவறாக யோசிக்கிறேன்.





மாவட்ட அப்போஸ்தலர் நூடிகர் க்றவுச (ஜேர்மனி) அப்போஸ்தலர் மில்சுக் ஆகியோர் உடன்பிரசங்கித்தனர். தலைமை அப்போஸ்தலரும் அப்போஸ்தலர் மில்சுக் அவர்களும் ஒரு சகோதரியுடன் உரையாடுகின்றனர்.



தலைமை அப்போஸ்தலர் ஷ்னைடர், அப்போஸ்தலர் மில்சுக், மாவட்ட அப்போஸ்தலர் நூடிகர் க்றவுச தேவாராதனைக்குப் பின் விடைபெறுகிறார்கள்.

அதாவது, எனது சொந்த ஆத்துமாவை நேசிப்பதனால் நான் பிறரை அழைக்கிறவனாகிறேன், பிறரை நேசிப்பதனால் அல்ல! கிறிஸ்துவின் மணவாட்டி தேவனிடமும் பிறரிடமும் அன்புகூருகிறாள்.

பவுலுக்கு நேர்ந்த சூழ்நிலையே நமக்கும் உள்ளது. பரிசுத்த ஆவி இன்று நமக்குக் கூறுகிறார்:"உற்சாகமிழக்கவேண்டாம். இன்றைய அப்போஸ்தலர்களின் செயற்பாடுகளை விசுவாசியுங்கள். அவர்கள் உலகில் செயற்படும் வரைக்கும் இரட்சிப்பை விரும்பும் ஆத்துமாக்களை இங்கும் மறுமையிலும் கண்டுகொள்ளமுடியும். நமது விசுவாசத்தையும், விசுவாச அனுபவங்களையும், தேவாராதனை அனுபவங்களையும் பகிரங்கப்படுத்துவோம். மனிதருக்கு சாத்தியமில்லை என்று கூறப்படுகிறவற்றை அதிசயங்களாய் நாம் நிறைவேற்றுவோம். கஷ்டங்களிலும் நாம் மகிழ்ந்திருக்கிறோம், நாம் திடநம்பிக்கையாயிருக்கிறோம், நாம் மன்னிக்கிறோம். நம்மிடம் ஒன்றுமில்லாவிட்டாலும்கூட காணிக்கையிடுகிறோம். நமது வித்தியாசங்கள் நடுவிலும் நாம் ஒன்றாயிருக்கிறோம். தேவனாம் முடியாதது ஒன்றும் இல்லை. நமது அயலாரின் இன்பதுன்பங்களில் பங்கேற்போம். நமது சொந்த ஆதாயத்துக்காக அல்லாமல் அன்பினாலேயே நாம் அவ்வாறு செய்கிறோம் என்று நிரூபிப்போம்.

## பிரதான சிந்தனைகள்

நமக்கு முன் வைக்கப்படும் சவால்களின் நடுவிலும் நமது விசுவாசத்தை சொல்லிலும் செயலிலும் அறிக்கைபண்ணுவோம். நமது கடமைகளை அறிந்திருத்தலும், அயலாரிடத்தல் அன்புகூருதலும் நமது உற்சாகமாயிருக்கட்டும்.

- தனது விசுவாசத்தை அறிக்கைபண்ணுவதை தடுத்து நிறுத்த பவுல் இடமளிக்கவில்லை.
- பவுல் மூலமாக தேவன் அதிசயங்கள் செய்தார்.
- மனிதர்களின் இன்பதுன்பங்களில் பவுல் பங்கேற்றார்.
- சுய ஆதாயத்துக்காக அல்லாமல், அன்பினால் பவுல் உற்சாகமடைந்தார்.



## உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் (லூக்கா 6:27-36)

பன்னிரண்டு அப்போஸ்தலரை தெரிந்துகொண்டபின் இயேசு ஜனங்களுக்கு உபதேசித்தார். அவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென விவரித்தார்.

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள். உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு; உன் அங்கியை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் எடுத்துக்கொள்ளத் தடைபண்ணாதே. உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே. மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும்

தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

இயேசு அநேகருக்கு பிரசங்கித்த நீண்ட உபதேசத்தின் ஒரு பாகமாய் சத்துருக்களை சிநேகியுங்கள் என்ற கட்டளை உள்ளது. சமனான இடத்தில் நின்று இயேசு பிரசங்கத்ததை லூக்கா சுவிசேஷம் கூறுகிறது. மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்படும் மலைப்பிரசங்கத்துக்கு இது ஒப்பானது. இரண்டு பிரசங்கமும் சத்துருக்களையும் சிநேகித்தலின் கட்டளையுடன் துவங்குகிறது.



Mirella Fortunato



# கொட்டோசாயா வீட்டில் (ஃபிஜீ குடியரசில்)





"புலா" என்று அடிக்கடி ஃபிஜீ தீவில் கூறப்படும் வார்த்தை "ஹலோ" என்னும் அர்த்தமுள்ளது. "நி சா புலா விநாகா" என்றால் "நல்வரவு" என்று அர்த்தம். இங்கு வரும் வெளிநாட்டவர்கள் விமானம் மூலமாக நாடி சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்குகிறார்கள். விடிலெவு என்னும் பிரதான தீவில் இது அமைந்துள்ளது. நாங்கள் இங்கு வசிக்கிறோம்.



நான் ஒரேயொரு தடவை விமானத்தில் சென்றிருக்கிறேன். ஒரு விமானியாகவேண்டும் என்பது என் இலட்சியம். இப் புகைப்படம் எடுக்கப்பட்டபொழுது எனக்கு பன்னிரண்டு வயது, நான் ஏழாம் வகுப்பில் இருந்தேன். என் பெயர் கொட்டோசாயா. படத்தில் என்னோடு நிற்கிறவர் என் சிநேகிதி கமாரி. நாங்கள் இருவரும் நன்கு பாடுவோம்.



திடப்படுத்தலுக்குப் பிறகு, இளவயதினர் கூட்டங்களில் கலந்துகொள்ளவேண்டும் என்று இருவரும் காத்திருக்கிறோம். ஓய்வுநாள் வகுப்புக்குச் செல்வதும், அங்கு பாட்டுக்குழுவில் பாடுவதும் எனக்குப் பிரியமானது. ஆலயத்தில் பாட்டுக்குழுவின் எனது அம்மா கராலினியும் பாடுகிறார். 2007ல் தலைமை அப்போஸ்தலர் லேபர் இங்கு வந்திருந்தார்.

நாடி நகரில் என் தாத்தா பாட்டியின் வீட்டில் நாங்கள் வசிக்கிறோம். ஃபிஜீ தீவில் அவர்களே முதலாவது புதிய அப்போஸ்தல விசுவாசிகள். என் தாத்தா இங்கு மாவட்ட மூப்பர்.

ஃபிஜீ குடியரசில் 300க்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. அதில் சுமார் 100 தீவுகளிலேயே மனிதர்கள் வசிக்கிறார்கள்.

மரவள்ளிக்கிழங்கும் மீனும், கோழி இறைச்சியும் எனக்குப் பிடித்த உணவு. நிலத்துக்கு அடியில் மூட்டப்படும் அடுப்பில் இவ்வுணவு சமைக்கப்படுவதால் ருசிமிக்கது. வாழை இலையில் சுற்றி சில மணிநேரங்கள் அடுப்பில் சமைப்பார்கள். சிலநேரங்களில் நானே மீன் பிடித்துவருவேன்.



எனக்கு உடன்பிறப்புகள் இல்லை. ஆனால் நிறைய நண்பர்களும், செல்லப்பிராணிகளும் உண்டு. ஒரு நாயும், இரண்டு பசுக்களும் உள்ளன.







என் அப்பா அலென்சியா ஒரு விவசாயி. கரும்பு, வாழை, தேங்காய் முதலியன ஃபிஜீயில் வசிக்கிறவர்களுக்கு பிரதான உணவுகள். எங்கள் தேசியக்கொடியில் ஒரு வெள்ளைப்புறாவின் சின்னமும், மேற்கூறிய தாவரங்களும் பதிக்கப்பட்டுள்ளன. சுமார் நூறுவருடங்களாக பிரித்தானிய குடியேற்றமாய் ஃபிஜீ விளங்கினது. ஆகையினால், தேசியக்கொடியின் இடதுபக்க மூலையில் பிரித்தானிய சின்னமும் வரையப்பட்டிருக்கிறது. 1970 ஒக்டோபர் 10ம் திகதி முதற்தடவை எங்கள் கொடி ஏற்றப்பட்டது.

# தபால்பெட்டி



## சத்துரு என்றால் என்ன?

"உங்களுக்கு தீமை செய்ய நினைக்கிறவன் சத்துரு. உங்களால் விலக்கமுடியாத தீய சிந்தனையும், ஜெயங்கொள்ளமுடியாத பயமும்கூட சத்துருவே!"
Melina, 11, from Ostelsheim in Germany

"கத்தியெடுத்து மற்றவர்களைப் பயமுறுத்துகிறவன் ஒரு சத்துரு."
Sina from Augsburg-Lechhausen in Germany




"எனது லாப்டாப், நான் வைத்திருக்கும் பணம் முதலியவற்றைப் பார்த்து பொறாமை கொள்கிறவன் ஒரு சத்துரு. என் நண்பர்களுக்கும் எனக்கும் பகையுண்டாக்குவதற்கு எதையும் அவன் செய்வான்."
Anaise, 13, from Mauritius

"நான் வைத்திருந்த பந்தை ஒருவன் திருடினான். அதைத் தராமல் வைத்திருக்கிறான். அவன் ஒரு சத்துரு."
Jonathan, 10, from Mauritius

"என்னை விரும்பாதவனும், என்னோடு எதையும் பகிர்ந்துகொள்ள விரும்பாதவனும் ஒரு சத்துரு. என்னைப் பற்றி அவதூறு பேசும் சத்துருக்கள் என் வகுப்பில் இருக்கிறார்கள்."
Anastasia, 10, from Mauritius



Oliver Rütten

# தேவசடங்குகள்

கடந்த செப்டம்பரில் புதிய அப்போஸ்தல சபையின் போதனா விளக்க வினாவிடை நூல் வெளிவந்தது. சுமார் 750 வினா விடைகளை கம்யூனிட்டி சஞ்சிகை பிரசுரிக்கிறது. இத்தடவை தேவசடங்குகளையும், மரித்தபின் வாழ்வதையும் குறித்து எழுதுகிறோம்.

தேவசடங்குகள் எவை?
தேவனுடைய கிருபையின் அடிப்படை கிரியைகளாக தேவசடங்குகள் விளங்குகின்றன. மனிதர்மேல் மனிதர் நிறைவேற்றும் இந்த பரிசுத்த நடபடிகளைப் பெறுகிறவர்களுக்கு இரட்சிப்பை தேவன் வழங்குகிறார்.

தேவசடங்குகளின் நோக்கம் எது?
மனிதர் இரட்சிப்பை அடைந்துகொள்வதற்கு தேவசடங்குகள் வழிசெய்கின்றன. இவற்றின் மூலம் மனிதர் தேவனுடன் ஜீவஐக்கியத்தைப் பெற்று அதனுள் காத்துக்கொள்ளப்படுகின்றனர்.
ஜலத்தினால் ஞானஸ்நானம், பரிசுத்த முத்திரை, பரிசுத்த நற்கருணை ஆகிய மூன்று தேவசடங்குகளைப் பெறுதல், கிறிஸ்துவின் மறுவருகையில் கர்த்தரோடு ஐக்கியமடையும் சந்தர்ப்பத்தை மனிதருக்கு வழங்குகின்றன.

ஜலத்தினால் வழங்கப்படும் ஞானஸ்நானத்தினால் என்ன சம்பவிக்கிறது?
ஜலத்தினாலே வழங்கப்படும் பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாக, மனிதருக்கும் தேவனுக்கும் இடையில் நிலவும் உறவில் ஒரு அடிப்படை மாற்றம் உண்டாகிறது. பூர்வீக பாவங்கள் கழுவப்படுவதன்மூலம், ஞானஸ்நானம் பெறுகிறவர் தேவனிடமிருந்து தூரவிலகியிருக்கும் நிலவரத்திலிருந்து வெளியேறி தேவனுடைய ஆதரவுக்குள் பிரவேசிக்கிறார். அவர் ஒரு கிறிஸ்தவனாகிறார்.
ஞானஸ்நானம்பெற்றவர் தன் விசுவாசத்தின் மூலம், கிறிஸ்துவைச் சாட்சியிடுவதன்மூலம், கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவராகிறார்.

ஞானஸ்நானம் குறித்து சீஷர்களுக்கு இயேசு என்ன கூறினார்?
உயிர்த்தெழுந்தபின் இயேசு தம் சீஷர்களுக்கு பெரும் கட்டளையைக் கொடுத்தார்: “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து...” (மத்தேயு 28:19). இதனால் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களின் கடமைகளில் ஒன்றாய் விளங்குகிறது. புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தைக் குறித்துக் கூறும்பொழுது, இரண்டு பாகங்களான ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுகின்றது. அதாவது, தண்ணீரினாலும், பரிசுத்த ஆவியினாலும் வழங்கப்படும் ஞானஸ்நானம். (அப். 8:14). ஜலத்தினால் வழங்கப்படும் ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் இவ்விதம் ஒன்றிணைந்தவை.

ஜலத்தினால் ஞானஸ்நானத்தை எவர் பெற்றுக்கொள்ளமுடியும்?
ஜலத்தினால் ஞானஸ்நானத்தை சகலரும் பெறமுடியும். இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசித்தல் இதற்கு முன்தேவையாக அமைகிறது.

ஏன் குழந்தைகள் ஞானஸ்நானம் பெறமுடியும்?
இயேசுவின் அறிக்கை குறிப்பிடுகிறது: "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது." (மாற்கு 10:14). தேவனுடைய ஆசீர்வாதம் சிறுபிள்ளைகளுக்கும் கிடைக்கவேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இதில் தேவசடங்குகளும் உள்ளடங்குகின்றன. முழுக்குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதை புதிய ஏற்பாடு சாட்சியிடுகிறது: "அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 16:33, 16:15). அனைவரும், வீட்டாரும் என்று கூறப்படுவதில் பிள்ளைகளும் உள்ளடங்குகிறார்கள். இதிலிருந்து சிறுபிள்ளைகள் ஞானஸ்நானம் பெறுதல் கிறிஸ்தவ பாரம்பரியமாய் மாறியது. மேலும் சிறுபிள்ளைகள் ஞானஸ்நானம் பெறும்பொழுது, அவர்களை வளர்க்கும் பொறுப்பைக் கொண்டிருக்கிறவர்கள் பிள்ளைகளின் சார்பில் இயேசுகிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தை அறிக்கைபண்ணுகிறார்கள். சுவிசேஷத்திற்கேற்ப தங்கள் பிள்ளைகளின் சமயக்கல்விக்கான பொறுப்பேற்கும் கடமையையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

மற்ற கிறிஸ்தவ சபைகள் வழங்கும் ஞானஸ்நானம் பெறுமதியானதா?
ஆம், ஜலத்தினாலே பரிசுத்த ஞானஸ்நானம் வழங்கப்படுதல் கிறிஸ்துவின் ஏக சபையில் சகல பாகங்களிலும் சாத்தியப்படுவதும் பெறுமதியுள்ளதாகவும் விளங்குகிறது. பூரண இரட்சிப்புக்கான வழியில் தண்ணீர் ஞானஸ்நானம் முதற்படியாய் அமைந்திருக்கிறது. தண்ணீரினாலும், தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் மூலமாகவும் வழங்கப்படும் ஞானஸ்நானம் பெறுமதியுள்ளது. ஞானஸ்நானம் முழுச்சபைக்கும் பொறுப்பளிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய சர்வலோக இரட்சிக்கும் சித்தம் இதற்குக் காரணமாய் அமைகிறது.

கர்த்தருடைய இராப்போஜனம் என்று கூறப்படுதல் எதிலிருந்து தோன்றியது?
இயேசுகிறிஸ்து தேவசடங்கை நிறுவிய சந்தர்ப்பத்திலிருந்து "இராப்போஜனம்" என்று கூறப்படுதல் உருவானது. இயேசு சிலுவையிலறையப்படுவதற்கு முந்தின சாயந்தரத்தில் அப்போஸ்தலர்களுடன் பஸ்கா போஜனம் கொண்டாடினார்.

நற்கருணை அப்பம் புனிதப்படுத்தப்படும்பொழுது என்ன சம்பவிக்கிறது?
புனிதப்படுத்தப்படுதலின்பொழுது இயேசுகிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் பிரசன்னமாகிறது.
புனிதப்படுத்தப்படுவதனால் அப்பமும் திராட்சரசமும் உருமாறுவதில்லை. ஆனால், இயேசுவின் சரீரமும் இரத்தமும் அப்பத்திலும் இரத்தத்திலும் இணைந்துகொள்கின்றது. பரிசுத்த நற்கருணையில் அப்பமும் திராட்சரசமும் வெறும் உருவகமாகவோ அல்லது இயேசுவின் சரீரத்துக்கும் இரத்தத்துக்கும் அடையாளமாகவோ மட்டும் இருப்பதில்லை. அவை புனிதமாக்கப்பட்ட பின்னர், இயேசுவின் சரீரமும் இரத்தமும் உண்மையிலேயே அவற்றில் பிரசன்னமாகிறது.

பரிசுத்த நற்கருணையில் இயேசுகிறிஸ்துவின் தியாகபலி பிரசன்னமாயிருக்கிறதா?
ஆம். இயேசுகிறிஸ்துவின் தியாகபலி பரிசுத்த நற்கருணையில் பிரசன்னமாயிருக்கிறது. பலியானது மறுபடியும் பலியிடப்படவேண்டியதில்லை. அது "ஒரேதரம் பலியிடப்பட்டது" (எபிரெயர் 10:10-14).
பரிசுத்த நற்கருணையின் பலன்கள் எவை?
பரிசுத்த நற்கருணை இயேசுகிறிஸ்துவுடன் நெருக்கமான ஐக்கியத்தைக் கொண்டுவருகிறது. தேவகுமாரனுடைய சுபாவத்தையும் வல்லமையையும் வழங்குகிறது. பரிசுத்த நற்கருணையில் பங்கேற்றல் விசுவாசிகள் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுதலையும் ஊக்கப்படுத்துகிறது. ஏனெனில் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சுபாவத்தில் இணைந்து அபிவிருத்தியடைகிறார்கள். கிறிஸ்துவின் மறுவருகைக்காக ஆயத்தமடைவதில் பரிசுத்த நற்கருணை பிரதான ஆதாரமாய் விளங்குகிறது.

பரிசுத்த முத்திரை என்றால் என்ன?
பரிசுத்த முத்திரை ஒரு தேவசடங்காகும். அதன்மூலம் ஒரு விசுவாசி, ஒரு அப்போஸ்தலன் கைவைத்து ஜெபிப்பதன்மூலம் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகிறார். அதன்மூலம் விசுவாசி முதற்பலனாய் மாறுவதற்காக அழைக்கப்படுதலுடன், ஒரு தேவபிள்ளையாய் ஆகிறார்.

பரிசுத்த முத்திரை தேவசடங்கு எவ்வாறு வழங்கப்படுகிறது?
ஞானஸ்நானம்பெற்ற ஒருவருக்கு தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் வரத்தை வழங்கும்போது பரிசுத்த முத்திரை என்னும் தேவசடங்கு நிறைவேற்றப்படுகிறது. அவர்கள் அதை நிறைவேற்றும்பொழுது, ஞானஸ்நானம்பெற்ற விசுவாசியின் நெற்றியில் கைகளை வைத்து ஜெபிக்கிறார்கள்.
பரிசுத்த முத்திரையின் பலன்கள் என்ன?
பரிசுத்த முத்திரையின்பொழுது விசுவாசி பரிசுத்த ஆவியினால் முழுமையாய் நிரப்பப்படுகிறார். அதன்மூலம் தேவன் தம் இயல்பில் பகிர்ந்துகொள்ளும் பாக்கியத்தை வழங்குகிறார். அதன்மூலம் தேவன் தமது வல்லமை, ஜீவன், அன்பு என்பவற்றிலிருந்து வழங்குகிறார். "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்..." (ரோமர் 5:5).

Publisher: Jean-Luc Schneider, Überlandstrasse 243, CH-8051 Zürich/Switzerland
Verlag Friedrich Bischoff GmbH, Frankfurter Str. 233, 63263 Neu-Isenburg/Germany
Editor: Peter Johanning

# மரணத்தின் பின் வாழ்வு

மரணத்தின் பின் வாழ்வு உள்ளதா?
ஆம். மனிதன் மாம்சமாகவும் ஆவியாகவும் இருக்கிறான். சரீரம், ஆத்துமா, ஆவி என்பவற்றால் ஒரு மனிதன் அமைந்துள்ளான். மனித சரீரம் சாவுக்கேதுவானது, ஆதலால் நிலையற்றது. அது மண்ணிலிருந்து எடுக்கப்பட்டது, மண்ணுக்குத் திரும்புகிறது. (அதியாகமம் 3:19). இதற்கு மாறாக, ஆத்துமாவும் ஆவியும் சரீர மரணத்திற்குப் பின்னரும் ஜீவிப்பவை. அதனால் அழிவற்றவை. ஒரு மனிதனுடைய இயற்கைச் சுபாவம், அதாவது அவனுடைய குணத்தின் சாராம்சம், அனுபவங்கள், உணர்ச்சிகள், விசுவாசம், சிந்தனை முதலியவை அவனுடைய சரீர மரணத்தின் பின்னரும் தொடர்ந்து வாழ்கின்றன.

"கடவுள் மனிதர்களை அழியாமைக்கென்று படைத்தார்; தம் சொந்த இயல்பின் சாயலில் அவர்களை உருவாக்கினார்." (சாலோமின் ஞானம் 2:23)

மரணம் என்றால் என்ன?
ஒரு மனிதனின் சரீர மரணத்திற்கும் ஆன்மீக மரணத் திற்கும் இடையில் ஒரு வித்தியாசம் உள்ளது. சரீர மரணமானது பூமி வாழ்வின் முடிவைக் குறிக்கிறது. இது சம்பவிக்கும்பொழுது ஆத்துவாம் ஆவியும் சரீரத்தை விட்டு வெளியேறுகின்றன. ஆன்மீக மரணம் எனப்படுவது, தேவனிடமிருந்து மனிதன் பிரிந்துசெல்வதை அர்த்தப்படுத்துகிறது. இது பாவத்தின் விளைவாகும். இரண்டாம் மரணத்தைக் குறித்து வேதாகமம் குறிப்பிடுகிறது (வெளி. 20:6; 21:8).

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டா ன நித்தியஜீவன்." (ரோமர் 6:23)

மரணத்தின்மேல் வல்லமை எவருக்குண்டு?
திரியேக தேவனே ஜீவனுக்கும் மரணத்துக்கும் ஆண்டவராய் விளங்குகிறார். இயேசுகிறிஸ்து தமது உயிர்த்தெழுதலினால் மரணத்தை வெற்றிகொண்டார்.



Frank Schuldt

அதன்மூலம், நித்திய ஜீவனில் பிரவேசிக்கும் சாத்தியத்தை மனிதனுக்கு வழங்கினார். ''அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.'' (2 தீமோத்தேயு 1:10).

இயேசுகிறிஸ்துவின் உயர்த்தெழுதலின் பிரதானத்துவம் என்ன?

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மரித்தோர் உயிர்த்தெழுதலுக்கு ஒரு அத்திவாரமாகும். அவர் உயிர்த்தெழுந்ததால், மரித்தோர் உயிர்த்தெழுவார்கள். ''சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்'' (தானியேல் 12:2).

"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்." (1 கொரிந்தியர் 15: 51–52).

மரணத்திற்குப் பிறகு வாழ்வைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறதா?

சரீரமரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கையைக் குறித்து பழைய ஏற்பாடு ஏற்கனவே கூறுகிறது. புதிய ஏற்பாட்டிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதைக் குறித்துக் குறிப்பிடப்படுகிறது. 1 பேதுரு 3:19-20ல் வாசிக்கிறோம்: ''அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சில ராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.''

சரீர மரணத்திற்குப் பிறகு மனிதர் எங்கு பிரவேசிக்கிறார்கள்?

மரணமடைந்த மனிதரின் ஆத்துமாக்கள் மறுமையில் பிரவேசிக்கின்றன.

மரித்தோருக்கு மறுபிறவி உள்ளதா?

இல்லை. மனிதராயினும், மிருகமாயினும், தாவரங்களாயினும், அவை பூமியில் மறுபடி பிறந்து வாழ்வதைக் குறித்த அறிக்கைகள் வேதாகமத்துக்கும் சுவிசேஷத்துக்கும் முரண்பட்டவை. '' ஒரேதரம் மரிப்பதும்... மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே.'' (எபிரெயர் 2:27).

பல்வேறு வடிவங்களில் மனிதர் மறுபிறவியெடுத்து பூமியில் வாழ்கிறார்கள் என்னும் கருத்து பல்வேறு ரீதியில் உலகில் நிலவுகின்றது. இது கிறிஸ்தவ மார்க்கத்தில் எவ்விதத்திலும் கூறப்படவில்லை.

மரித்தோருடன் தொடர்புகொள்ள முடியுமா?
அவர்களை நினைத்து அவர்களுக்காக ஜெபிப்பதன்மூலம் அவர்களோடு நாம் தொடர்புகொள்கிறோம். பில்லி சூனியம் முதலிய வழிகளில் மரித்தோருடன் தொடர்புகொள்ள முயற்சிப்பது தேவனால் தடைபண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் அது பாவமாகும். ''தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறி சொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்.'' (உபாகமம் 18:10-12)

மறுமையில் ஆத்துமாக்களின் நிலவரம் என்ன?

மறுமையில் இருக்கும் ஆத்துமாக்கள் தேவனுக்கு அருகில் அல்லது வெகுதூரத்தில் இருக்கமுடியும். சரீர மரணத்தினால் ஒருவரின் ஆத்துமாவின் நிலையில் எந்த மாற்றமும் உண்டாவதில்லை. விசுவாசம்-அவிசுவாசம், ஒப்புரவாகுதல் - ஒப்புரவுகொள்ளாமை, அன்பு-வெறுப்பு முதலியவற்றால் பூமி வாழ்வில் மட்டுமின்றி மறுமையிலும் ஆத்துமா தாக்கத்துக்குள்ளாகிறது. ஐசுவரியவானையும் ஏழை லாசருவையும் குறித்துக் கூறப்பட்ட உவமையில் இது சித்தரிக்கப்படுகிறது. (லூக்கா 16:19-31). தங்கள் ஆத்துமாவின் நிலவரத்தை மரித்தோர் அறியமுடியும். அங்கு வேதனைப்படுகிறவர்கள் உதவியை நாடவும் முடியும்.

மறுமையில் ஆத்துமாக்களின் நிலை மாறமுடியுமா?
ஆம். மறுமையிலிருக்கும் ஆத்துமாக்களின் நிலைமை மாற முடிந்த சாத்தியத்தை கிறிஸ்துவின் பலி உண்டு பண்ணியது. மரணத்திற்குப் பிறகு, இயேசு மறுமைக்குள் பிரவேசித்து பிரசங்கித்தார். விசுவாசத்தில் ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு மாற்றமடையும் சாத்தியம் கிடைக்கிறது. ஆகையால், மனிதர் சரீரமரணத்தின் பின்பும் இரட்சிப்பை அடையமுடியும்.

மறுமையில் ஆத்துமாக்களில் நிலை எவ்வாறு மாறுகிறது?
சுவிசேஷத்தை ஒருபோதும் கேட்டிராத, பாவமன்னிப்பைப் பெற்றிராத, எந்த தேவசடங்கையும் பெற்றிராத மறுமையில் உள்ள ஆத்துமாக்கள் தேவனுக்க தொலைதூரத்திலிருக்கும் நிலையை உணர்கிறார்கள். இந்நிலை, இயேசுவையும் அவருடைய பலியையும் விசுவாசித்து தேவசடங்குகளைப் பெற்றுக்கொள்வதனாலே மாறமுடியும்.

மரித்தோர் இரட்சிப்படைவதற்கு நாம் உதவமுடியுமா?
ஆம்,மீட்கப்படாத ஆத்துமாக்களுக்காக ஜெபத்தில் நாம் பரிந்துபேசி, அவர்களுக்கு உதவுமாறு கர்த்தரிடம் கேட்க முடியும்.இந்த ஆத்துமாக்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்காக நாம் ஜெபிக்கமுடியும்.